# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 19 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 19


## ஒரு ஏழை விதவையின் காணிக்கை

(பின்வரும் பகுதியானது மாற்கு 12 : 41–44 அதிகாரத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் சொல்லப்பட்டது) .

இயேசு தேவாலயத்திற்கு வெளியே காணிக்கைப்பெட்டி வைத்திருக்கும் இடத்தில் இருந்து ஜனங்களை உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். உண்மையாகவே அது எல்லா ஜனங்களும் வருகின்ற இடம். தேவாலய வளாகத்திற்குள் விற்கிறவர்களும், வாங்குகிறவர் களுமாய் ஜனங்கள் அங்கேயும் இங்கேயும் சென்று கொண்டிருந்தார்கள். தூரதேசத்தி லிருந்து வந்த யூதர்கள் பயணக் களைப்பினால் ஆசாரியர் களுக்குச் செலுத்த வேண்டிய பலிகளுக்கு தயார் செய்து கொண்டிருந்தனர். பரிசேயர்கள் பெருமையுடன் ஜனக்கூட்டத்திற்கு நடுவிலே நின்றுகொண்டு, மிகுந்த சத்தமாய் தங்கள் தயாளத்தைக் குறித்து ஜெபித்துக் கொண்டி ருந்தார்கள். மற்ற ஜனங்களோ அமைதியாக தேவாலயத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு தங்கள் பலிகளை செலுத்தி தேவ சமுகத்தில் விண்ணப்பம் செய்துகொண்டிருந்தார்கள்.

இயேசு இவர்கள் எல்லாருடைய செயல்களையும் அவர்களுடைய இருதய எண்ணங்களையும் தன் ஆவியிலே உணர்ந்தார்.



ஒவ்வொருவரையும் அவர் உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். சிலருடைய மனதிலே பெருமையும், சிலருடைய மனதிலே அமைதியையும் உணர்ந்தார். சிலரின் சுயநீதியையும், பெருமையையும் மற்ற பலரின் மனந்திரும்புதலையும், இருதய பாரத்தையும் அறிந்திருந்தார்.

எக்காளம் ஊதப்பட்டது. பரிசேயர்கள் செலுத்தும் பெரிய தொகையான காணிக்கைகளை பார்க்கும்படியாக இயேசுவும் சுற்றி நின்ற ஜனக்கூட்டத்தாரும் திரும்பினார்கள். தேவாலய வளாகத்திலே ஜனங்களுக்காக அநேக காணிக்கைப்பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும். ஆகவே இயேசுவும் மிகுந்த உற்சாகத்தோடு ஜனங்களுடைய காணிக்கையை கவனித்துக் கொண்டிருந்தார்.

சிலர் அமைதியாக காணிக்கையை போட்டுச் சென்றார்கள். இன்னும் சிலர் மிகுந்த ஆரவாரத்தோடு, கை அசைத்துக் கொண்டு வந்து நின்று மிகுதியான காணிக்கைகளை பெட்டியிலே போட்டார்கள்.

ஒரு சிறிய இளமையான குடும்பத்தினர் தங்களுடைய சிறிய தொகையினிமித்தம் தடுமாற்றத்துடன் வந்து, போட்டுச் சென்றார்கள். நேர்த்தியான உடை அணிந்து வந்த பலர் தங்கள் தயாளத்தினால் அநேகமாயிரம் கொடுத்தார்கள்.


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி<br>தசமபாகமும் கொடுத்தலும் | ஒருநோக்கு செய்தி<br>தசமபாகமும் கொடுத்தலும் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா?<br>ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 - 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்



## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;

மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,

1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,

எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ;

தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;

1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;

வெளி 18 : 2-4

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;

1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;

1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;

உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ;

2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;

2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**

இயேசு பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஒரு ஏழை விதவை இரண்டு காசைப் போட்டாள்.ஒரு காசு என்பது மிகச் சொற்பமான பணமதிப்பைக் கொண்ட யூதர்களின் நாணயம்.அதைக் கண்டவுடனே கிறிஸ்து அந்த ஏழை தாயின் தியாக உள்ளத்தை எண்ணி திகைத்தார்.அவள் தன் பிதாவாகிய தேவனுக்காக தனக்குண்டான யாவற்றையும் போட்டுவிட்டாள்.அன்று இரவு உணவுக்குகூட அவளிடம் காசு இல்லை.அவள் தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததையெல்லாம் போட்டுவிட்டாள்.

இயேசு தம்முடைய சீஷர்களை தம்மண்டையிலே அழைத்தார். அவர்களெல்லாரும் கூடியதும், அவர்களோடு பேசத்தொடங்கினார். சுற்றியிருந்த ஜனங்களும் ஆர்வமாய் அவர் என்ன சொல்ல போகிறார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இந்த ஏழை விதவை மற்ற எல்லாரைக் காட்டிலும் அதிகமாய் போட்டாள் என்றார்.

ஏனெனில் அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள்.இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.

இந்த ஏழை விதவையினிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்வது யாதெனில் தேவன் நம்முடைய கொடுத்தலின் தன்மையையும், காணிக்கையையும் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவர் ஐசுவரியவான்களையும், ஏழைகளின் வறுமையையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். பொதுவாகவும், தனியாகவும் ஒவ்வொருவருடைய நிலையையும் அறிகிறார்.ஜனங்கள் தாங்களாகவே மனப்பூர்வமாய் கொடுக்கிறார்களா அல்லது மற்றவர்களுக்குமுன் தங்கள் தயாளத்தின் பெருமையை வெளிப்படுத்தும் வண்ணமாய் செய்கிறார்களா என்று நம்மை பார்த்துக்கொண்டிருக்கிறார் .

கர்த்தராகிய தேவன் நாம் கொடுக்கும் காணிக்கைகளில் பிரியப்படுகிறவரல்ல. மாறாக நாம் எப்படி மனப்பூர்வமாயும், உதாரத்துவமாயும் கொடுக்கிறோம் என்றே நம்மைப் பார்க்கிறார்.வறுமையிலும் தியாகத்தோடு கொடுத்த அந்த ஏழை விதவையின் உள்ளம் பெரியது.ஒருவர் கொடுக்கும் பெரிய அளவிலான தொகை பலவிதமான சுவிசேஷப்பணிகளுக்கு பயன்பட்டாலும் கூட, அதனுடைய அளவைப் பொறுத்து பரலோகத்திலே பொக்கிஷம் சேர்த்து வைக்கப்படுவதில்லை. மாறாக நாம் தியாகத்தோடு கொடுக்கும் உள்ளத்தையே அவர் காண்கிறார்.

சிலர் தங்களுடைய மிகுதியான ஐசுவரியத்தினால் தொடர்ந்து ஊழியங்களுக்கு உதவி செய்கிறார்கள். சில ஏழை ஜனங்கள் தங்கள் வறுமையினிமித்தம் உதவ முடிவதில்லை.இயேசுகிறிஸ்து அந்த ஏழை விதவையினுடைய இருதயத்தையே உங்கள் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார்.நீங்கள் ஏழையோ, செல்வந்தரோ மனப்பூர்வமாய்க் கர்த்தருக்கென்று கொடுங்கள்.உங்களுடைய ஐசுவரியத்தின் மிகுதியினால் அல்ல.மாறாக உங்கள் தியாகத்தின் மிகுதியினால் கொடுங்கள்.

## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள் – மல்கி 3 : 8

மல்கியா தீர்க்கதரிசியானவர், ஜனங்களிடம் தேவனை நீங்கள் வஞ்சிக்கிறீர்கள், எதினாலே எனில் தசமபாகத்திலும், காணிக்கையிலும் என்று எச்சரிக்கிறார்.இந்த வசனத்தைக் காரணம் காட்டி, பல போதகர்கள் ஜனங்களிடமிருந்து கட்டாயமாக பணம் வசூலிக்க முற்படுகிறார்கள்.நான் சென்று சந்தித்த பல நாடுகளில் ஊழியத்தின் மைய நோக்கம் – காணிக்கை, காணிக்கை, காணிக்கை.

கடந்த இதழில் இருவேறு உடன்படிக்கைகளைக் குறித்துப் பார்த்தோம். தசமபாகம் என்பது பழைய ஏற்பாட்டுகொள்கை. மேலும் பெறப்பட்ட புதிய உடன்படிக்கையின்படி, கொடுத்தல் என்பது மனப்பூர்வமாய் இருக்கவேண்டும்.நாம் கொடுக்கும் ஒவ்வொரு காணிக்கைக்கும் பலன் உண்டு. ஒரு போதகரைப் பொறுத்த வரையில் கொடுத்தல் என்பதைக் குறித்ததான போதனை என்பது ஜனங்களிடையே சுயநலமாய் தோன்ற செய்யும்.தேவனுடைய பரிசுத்தவான்கள் மத்தியிலே தேவையுள்ள முக்கியமான போதனை இதுவே.

தசமபாகம் என்பது கட்டாயமல்ல.ஆனால் கூடுதலாக கொடுத்தல் என்பது நம் கடமை.சில ஜனங்கள் கொஞ்சமாயும், சிலர் ஒன்றுமே கொடுப்பதுமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில், சகோதரரே நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள்.இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள் என்றார் (கலா 5 : 13).

தேவராஜ்யத்தின் பணிக்கென்று தேவைகள் ஏராளம். ஆகவே கொடுத்தலைக் குறித்து மிக முக்கியமான காரியங்களை மாத்திரம் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன்.முதலாவது வாரந்தோறும், ஞாயிற்றுக்கிழமைகளில் நம்மை போதித்து, நல்வழிகாட்டுகிற சபைப்போதகருக்கு கொடுப்பது நம் கடமை.சபையிலிருந்து போதகர் ஒருநாள் எடுத்துக் கொள்ளப்பட்டாலும் கூட, பின்பு சபைக்கூட்டத்தார் அதை தங்களுடைய கடமையாக கட்டாயம் செய்ய வேண்டும்.

அதேசமயம் சுவிசேஷகர்களும், மிஷனெரிப்பணி செய்கிறவர்களும் தங்களுக்கென்று எந்தவொரு கூட்டத்தாருடைய உதவியுமில்லாத நிலையில் இருக்கிறார்கள்.அவர்கள் சுவிசேஷப் பணிசெய்ய செல்லும் பயண செலவுகளும் கூட தாங்களாகவே செலவுசெய்து கொண்டு, கர்த்தருடைய பணியை செய்கிறார்கள்.ஒருமுறை செய்கிற உதவி என்பது ஆச்சரியமானது.ஆனால் மாதந்தோறும் தொடர்ந்து செய்கிற உதவிதான் மிகச் சிறந்தது.ஒருவேளை மிகப்பெரிய ஒரு தொகை ஒரு போதகருக்கு காணிக்கையாக நீங்கள் கொடுத்தால், அது அவருக்கு பல மாதங்களின் செலவுகளுக்குப் போதுமானதாக இருக்கும். கர்த்தர் அப்படியாக அவர்களை போஷிக்கிறார்.

கொடுத்தல் என்பது ஆசீர்வாதமே. அது சிறியதொகையானாலும், பெரிய தொகையானாலும் கர்த்தருக்கென்று உற்சாகமாய்க் கொடுக்கும்போது கர்த்தர் நம்மை நினைக்கிறார். நாம் சத்தியத்துக்கு கீழ்ப்படியும்போது, மெய்யாகவே அவர் நம்மை போஷிப்பார். கேரளாவில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்து உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**சபையின் காணிக்கைகளை மேலாண்மை செய்யும்விதம்**

சீஷர்கள் பெருகினபோது, தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்தில் இடைவிடாமல் தரித்திருக்க வேண்டியதால் சகோதரரே பரிசுத்தஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம் (அப்போ 6 : 2-3).

சூழ்நிலைக்கேற்ப சபையின் காணிக்கைகளை கையாளக்கூடாது.மேலும் ஒரு விசுவாசி எவ்வளவு கொடுக்கிறார் என அறிந்துகொள்ளாமலிருப்பது சபையின் போதகருக்கு நல்லது.ஏனெனில் மோசம்போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்



## கீழ்ப்படிதலின் நன்மைகள்

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் (லூக் 6 : 38).
தியாக உள்ளத்தோடு தங்களுடைய முதற்பலனை தேவனுக்கு தருவதினால் வரும் ஆசீர்வாதங்களை பலர் இழந்து கொண்டிருக்கிறார்கள்.
கொடுக்கின்ற இதயத்தால் கிறிஸ்தவ வாழ்வு கட்டப்பட வேண்டும்.
நம்மைச் சுற்றி தேவையோடிருக்கும் அநேக ஜனங்களும், சுவிசேஷ காரியங்களும், அதன் வேலைக்கு ஆட்களும், பொருளாதார உதவியும் தேவைப்படுகிறது. நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது (யோவான் 15 : 12).பவுல் தீமோத்தேயுவிடம் நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிற வர்களும், உதாரகுணமுள்ளவர் களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு என்கிறார்.(1 தீமோ 6 : 18-20)

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : வேதாகமத்தில் தசமபாகமும், கொடுத்தலும்

**வேத வாசிப்பு:** இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதை பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான். (அப்போ 20 : 35)

**விளக்கம்:** தசமபாகம் என்பது பழைய ஏற்பாட்டின் நாட்களில் கட்டாயமாக கடைபிடிக்கப்படவேண்டிய கட்டளைகளுள் ஒன்று. புது உடன்படிக்கையின்படி உள்ளத்தின் ஆழத்திலிருந்து உற்சாகமாய், முழு மனதோடு, தியாகத்தோடு கொடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.புதிய ஏற்பாட்டிலே, நமது வருமானத்தின் பங்கை விட ஆவியில் அன்பும், தியாகமும் கொண்ட உள்ளத்தையே அவர் விரும்புகிறார்

**I.நியாயப்பிரமாணத்திற்கு முன்பு தசமபாகம்**

A.ஆதி 14 : 17-20 மெல்கிசேதேக்குக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்

B.ஆதி 28 : 20-22 யாக்கோபு தசமபாகம் செலுத்துவேன் என்றான்.

**II.மோசேயின் நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தசமபாகம்**

A.லேவி 27 : 30-33 நிலம் & விருட்சங்கள் சார்ந்த தசமபாகமே கர்த்தரின் கட்டளை

B. எண் 18 : 21-24 தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்

C. உபா 14 : 22-23 (12 :6-7) இரண்டாவது தசமபாகம் கட்டளையிடப்பட்டது.

D. உபா 14 : 28-29 (26 :12-13)திக்கற்றவனும் பரதேசியும் பங்கெடுக்கும் தசமபாகம்

E. மல் 3 : 8-9 இஸ்ரவேலர் கர்த்தரை வஞ்சித்தார்கள்

**III.மோசேயின் நியாயப்பிரமாணம் இல்லை** (இதழ் 18 ஐ பார்க்க)

A.எபி 8 : 6-13 புது உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது

B. மத் 23 : 23 இயேசு வேதபாரகரையும், பரிசேயரையும் கடிந்துகொள்கிறார்

C. ரோமர் 7 : 6 நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

**IV.புதிய ஏற்பாட்டில் கொடுத்தல்**

A.2 கொரி 9 : 6-7 உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

B.யாக் 2 : 14-18 விசுவாசத்தின் நிலை

C.எபேசி 4 : 28 குறைச்சலுள்ளவனுக்கு கொடுக்கத்தக்கதாக

**V.கொடுக்கிற விதம்**

A.மத் 6 : 1-4 அதிகமாக

B.2 கொரி 8 : 1-5 தன் மனதின்படியே (மாற் 12 : 41-44)

**VI.எவ்வளவு கொடுக்க வேண்டும்**

A.2 கொரி 9 : 7 தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்

B.1 கொரி 16 : 1-2 பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு

C.அப்போ 11 : 29 திராணிக்குத் தக்கதாக

D.அப்போ 5 : 1-11 உன் வசத்தில் இருக்கவில்லையோ

**VII.தேவையுள்ளவர்களுக்குக் கொடுங்கள்**

A.1 தீமோ 5 : 16 விதவைகள்

B.யாக் 1 : 27 திக்கற்ற பிள்ளைகள்

C.ரோமர் 15 : 25-26 பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்கு (அப் 11 : 27-29)

D.கலா 6 : 9-10 விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம்

E. யாக் 2 : 14-18 வஸ்திரமில்லாதவர்களுக்கும், அநுதின ஆகாரமில்லாதவர்களுக்கும்

**VIII.ஊழியத்திற்கு கொடுங்கள்**

A.1 கொரி 9 : 7-14

B.கலா 6 : 6 உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்ககடவன்

**IX.கொடுத்தலின் ஆசீர்வாதங்கள்**

A.அப்போ 20 : 35 கொடுக்கிறதே பாக்கியம்

B.லூக் 6 : 38 கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்

C.பிலி 4 : 18 தேவனுக்குப் பிரியமான உகந்த பலி

D.1 தீமோ 6 : 18-19 நித்திய ஜீவன்

**முடிவு :** இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள் மத் 10 : 8

# வேதாகமத்தில் தசமபாகமும், கொடுத்தலும்

**தசமபாகம் - வரலாறு**
பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள தசமபாகம் எனும் கட்டளையானது புதிய ஏற்பாட்டில் உற்சாகமாய்க் கொடுப்பதும், தியாகத்தோடு கர்த்தருக்கு கொடுப்பதும் சிறந்தது என்று மாற்றப்பட்டுள்ளது. ஆகவே அதை அறிந்து கொள்ளவும், புரிந்து செயல்படவும் வேண்டும்.

மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முன்பு, இரண்டுபேர் தங்களுடைய தசமபாகத்தைக் கர்த்தருக்கு செலுத்தியதற்கான ஆதாரம் ஆதி 14 : 17-20 ல் ஆபிரகாம் சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்தார். அங்கே தசமபாகம் என்பது தன்னுடைய வருமானத்தில் இருந்தோ அல்லது பயிர்ப்பெருக்கத்தின் செழிப்பினிமித்தமோ அல்ல, யுத்தத்தில் ஜெயம் பெற்றதற்காக, கொடுக்கப்பட்டது.

ஆதி 28 : 20-22 ல் தேவனாகிய கர்த்தர் உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் யாக்கோபுக்கு கொடுத்து, சமாதானத்தோடே திரும்பி வரப் பண்ணினால் உமக்கு தசமபாகம் செலுத்துவேன் என்று பொருத்தனை பண்ணிக் கொண்டான். இவ்விரண்டு சம்பவங்களிலும் தேவன் தசமபாகத்தை வலியுறுத்தாவிடில் கூட, அவர்களுடைய உற்சாக மனதோடே செலுத்தப்பட்ட தசமபாகத்தைக் காணமுடிகிறது.

**மோசேயின் நியாயப்பிரமாணம்**
மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தேவன் தசமபாகம் செலுத்துதலைக் கட்டளையிட்டிருந்தார்.பழைய ஏற்பாட்டிலே சொல்லப்பட்ட தசம பாகத்திற்கும், இக்காலத்தில் சபைகளில் சொல்லப்படுகிற தசமபாகத்திற்கும் வித்தியாசமுண்டு. லேவி 27 : 30-32 படி, தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது.

**பலவிதமான தசமபாகங்கள் பழைய ஏற்பாட்டில் இருந்தது**
தசமபாகம் என்பது பத்தில் ஒரு பங்கு என்றாலும் கூட பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தின்படி பல்வேறுவிதமான தசமபாகங்கள் உண்டு. ஆகவே பத்தில் ஒரு பங்குக்கும் மேலே செலுத்த வேண்டியிருக்கும். பல வேறுபாடுகள் காணப்பட்டாலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஏறக்குறைய 20 % தசமபாகம் கொடுக்கப்பட வேண்டியிருக்கும்.

**லேவியரின் தசமபாகம்**
லேவியருக்கு இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைப் போல, சுதந்தரப் பங்குவீதம் தரப்படவில்லை.ஏனெனில் அவர்கள் கர்த்தருடைய ஆசாரியப் பணிவிடைக்காரர்கள்.வருடாந்திர தசமபாகம் அல்லது லேவியரின் தசமபாகம் என்பது லேவியருக்கும், ஆசாரியர்களுக்குமான தேவையை பூர்த்தி செய்ய உதவுகிறது. லேவியின் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன் (எண் 18 : 21). லேவியர்களும், ஆசாரியர்களும் அவர்களின் பணிவிடைக்காக தசமபாகம் பெறத் தகுதியுள்ளவர்கள்.

**பண்டிகை தசமபாகம்**
இஸ்ரவேலிலே கூடாரப்பண்டிகை அநுசரிக்கப்படும்போது செலுத்தப்படும் இரண்டாவதுவிதமான தசமபாகம் இது. நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு, வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல்லா பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, உன் தானியத்திலும், உன் திராட்சரசத்திலும், உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய சந்நிதியில் புசிப்பாயாக (உபா 14 : 22-23). தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நீயும், உன் குடும்பத்தாரும் உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் புசித்துச் சந்தோஷப்படுவீர்களாக. இது வருஷத்திலே மூன்றுமுறை எருசலேமில் ஆசரிக்கப்படும் பண்டிகையின்போது செலுத்தப்பட வேண்டிய தசமபாகம் ஆகும்.




**திக்கற்றவர்களின் தசமபாகம்**
உபாகமம் 14 : 28-29 ; 26 : 12-13 அதிகாரங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ள மூன்றாவது தசமபாகம் திக்கற்றவர்களுக்கானது. இது வருஷந்தோறும் அல்ல.மூன்றாம் வருஷத்தின் முடிவிலே உன் வாசல்களில் இருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திருப்தியடைவார்களாக. ஞானிகள் மற்றும் யூதமத குருக்களிடையே இதைக்குறித்து தர்க்கம் உண்டாகிறது.ஏனெனில் இந்த தசமபாகம் இரண்டாவது தசமபாகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது அல்லது இது இரண்டாவது தசமபாகத்தோடு சேர்க்கப்பட்ட தானால், மூன்றாவது மற்றும் ஆறாம் வருடங்களிலே ஓய்வுநாட்களில் திக்கற்றோருக்கு தரப்பட வேண்டியது. முதல் தசமபாகமானது லேவியருக்கானது.இரண்டாவது எருசலேமுக்கு எடுத்து சொல்லப்பட வேண்டும்.மூன்றாவது உன் வாசலில் இருக்கும் திக்கற்றோருக்கானது (உபா 26 : 12).அப்பொழுது உன் கை செய்யும் வேலையி லெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார் (உபா 14 : 29). மேலும் செலுத்தப்படுகிற மற்ற காணிக்கைகளான தானியங்கள், ஆடுமாடுகளின் தலையீற்றுகள் என குறைந்தபட்சம் 20-23.3 %. இவையாவும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலே கட்டளை யிடப்பட்டவைகள். மல்கியா 3 : 8-9 ல் தீர்க்கதரிசியானவர்

இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்கள் கர்த்தரை வஞ்சித்தீர்கள் என்கிறார்.எதினாலே வஞ்சித்தோம் என்கிறீர்களோ? தசமபாகத்திலும், காணிக்கையிலுந்தானே.அதாவது மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி நடவாமல் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை வஞ்சித்தார்கள்.

**பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கை மாற்றியமைக்கப்பட்டது**

அதாவது இன்றைய காலக்கட்டத்தில் நாம் செலுத்தும் அரசாங்கவரி, சமயவரி போன்றே. மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் வரும் தசமபாகம் என்பதும் இஸ்ரவேல் அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படும் சமய, சமூக தேவையாயிருந்தது. தசமபாகம் என்பது பழையஏற்பாட்டின் வழக்கமே தவிர இப்போது இருக்கிற தவறான உபதேசத்தின் படி புதியஏற்பாட்டின் வழக்கமல்ல. நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று சொல்லி இயேசுகிறிஸ்துவின் வழியாய் பெறப்பட்ட புதிய உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டு, பழைய உடன்படிக்கை நீக்கிப் போடப்பட்டது (எபி 8 : 6-13).வசனம் 8 ன் படி இஸ்ரவேல் குடும்பத்தோடும் நான் புதுஉடன்படிக்கையை ஏற்படுத்துங் காலம் வருகிறது.



ஓய்வுநாள் ஆசரிப்பு, பலி செலுத்துதல், மாம்சீகமான ஆராதனைகளெல்லாம் எப்படி உருவழிந்து போனதோ, அதுபோலவே புதிய உடன்படிக்கையில் கட்டளை யிடப்படவில்லை. இயேசு கிறிஸ்து பரிசேயரிடம் நீங்கள் தசமபாகம் செலுத்தினாலும், நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள் (மத் 23 : 3 , லூக் 11 : 42).இயேசுகிறிஸ்துவின் நாட்களிலும் கூட, யூதர்களுக்குள்ளே தசமபாகம் என்பது பழக்கத்தி லிருந்து வந்தது. ஏனெனில் பெந்தெகோஸ்தே நாள் வரை முற்றிலுமான இரட்சிப்பு என்பது பூரணமாகவில்லை.

பழைய ஏற்பாட்டின் பல கொள்கைகள் திரும்பவும் குறிப்பிடப்பட்டு, அதிலுள்ள பல காரியங்கள் நம்முடைய வாழ்விலும், தேவனோடு உள்ள ஐக்கியத்திலும் பரிபூரணமாய் நிறைவேறியிருக்கிறது.தேவனுடைய நீதியையும், இரக்கத்தையும் விட்டுவிட்டு, என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று சொல்வதில் எந்த பிரயோஜனமுமில்லை (லூக் 18 : 12).இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யதக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப் பிரமாணத்திற்கு நாம் மரித்தவர்களாகி அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 7 : 6).

**புதிய ஏற்பாட்டில் கொடுத்தல்**

புதிய ஏற்பாட்டிலே தசமபாகமும் காணிக்கை கொடுத்தலும் பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது.

கிறிஸ்தவம் என்பது அன்பின் அடித்தளம். அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து சபையாருக்கு இந்த புதிய உடன்படிக்கையைக் குறித்து கூறியதாவது : சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்,பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி 9 : 6-7).

மனதில் நியமித்தபடியே கொடுக்ககடவன்

தசமபாக காணிக்கையைத் தவிர, மற்ற காணிக்கைகளான உற்சாக பலிகள்தான் கர்த்தருடையது.ஆதாம் கிளார்க்கின் தத்துவப்படி, யூதர்கள் இருவேறு கூற்றுகள் யாதெனில் ஒன்று நியாயப்பிரமாணத்தின்படி தேவைக்கென்று செலுத்தப்படுகிற தசமபாகம்.இன்னொன்று அவரவர் மனவிருப்பத்தின்படி அளிக்கும் காணிக்கை.புதிய ஏற்பாட்டில், தசமபாகமும் கொடுக்கவேண்டும். மனப் பூர்வமாய்க் கொடுக்கும் காணிக்கையிலும் கூட - கட்டளை யிடப்பட்ட பத்து அல்லது இருபது சதவீதம் என்பதல்ல. அதற்கும் மேலாக உதாரத்துவமாய் கொடுக்க வேண்டும்.

**கிறிஸ்தவர்களாகிய நம்முடையவைகள் ஒவ்வொன்றும் கர்த்தருக்குப் பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும்**

**கொடுப்பது நம் கடமை**

தசமபாகம் எனும் நியாயப்பிரமாண நிபந்தனையினின்று விடுதலையாக்கப்பட்டிருப்பினும், கொடுத்தல் என்பது கடமையே.கிறிஸ்தவர்களாகிய நம்முடையவை யாவும் கர்த்தராகிய தேவன் அருளிய ஈவு.

ஒரு குறிப்பிட்ட சதவீதம் கர்த்தருக்கு உரியது என்பதைவிட மனப்பூர்வமாகவும், உற்சாக மனதுடனும், தியாகத்தோடும், தாராளமாகவும் கொடுப்பதே உயர்ந்தது. முதலில் தேவனுக்கு கொடுப்பதை தெரிந்து கொள்ளவேண்டும். உற்சாகத்தோடு நாம் கொடுக்கும் காணிக்கையானது சுவிசேஷ பணிகளுக்கும், ஊழியக்காரியங்களுக்கும் உதவும். வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான் (அப்போ 20 : 35). உங்களால் அனுப்பப்பட்டவைகளை தேவனுக்குப் பிரியமான உகந்தபலியாக கையில் வரப்பற்றி கொண்டபடியால் நான் திருப்தி யடைந்திருக்கிறேன்(பிலி 4 : 18).

# கேள்விக்கு என்ன பதில்?

ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருக்கவேண்டிய கிறிஸ்தவர்களின் கொடுத்தல் என்பது என்ன? நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது (மத் 6 : 1-4). கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், மனுஷரால் புகழப்படுவதற்கு ஏற்ப தருமஞ் செய்யாமல், அன்பினாலும், இரக்கத்தினாலும் நம்மால் முடிந்தவரை பிறருக்கு உதவ வேண்டும்.

**சபையானது பணஞ் சேர்க்குதலை எடுத்துக் கொள்வது உகந்ததா? எப்படி?**
ஜனங்கள் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய் கொடுக்கும் காணிக்கைகளை சபைக் கூட்டத்தாருக்கு உகந்த வகையில் மிகச் சரியாக செயல்பட வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு கூறியது : பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன் (1 கொரி 16 : 1-2).

சபைக்கூட்டத்தாருக்கு பணஞ் சேர்க்குதல் வாரத்தின் முதல்நாள் அதாவது ஆராதனை நடைபெறும் நாளில் இருக்ககடவது.ஆகவே கர்த்தருக்கு கொடுப்பது என்பது புறக்கணிக்கப்படக்கூடாது. காணிக்கை என்பது ஒவ்வொருவரும் மனப்பூர்வமாய் கொடுக்க வேண்டியதே தவிர, கட்டாயமல்ல. கொடுத்தலின் சித்தாந்தத்தில் கட்டாயமாக யாரிடத்திலும் வசூலிக்கப்படக் கூடாது. தனியுரிமையும், சுதந்தரமும் முக்கியம். மனப்பூர்வமும், உற்சாகமுமே காணப்பட வேண்டுமே தவிர வேறெந்த மாதிரியான பணஞ்சேர்க்குதலும் சபைக்கூட்டத்திலே கடைபிடிக்கப்படக்கூடாது.

**ஒரு கிறிஸ்தவன் எப்படி கொடுக்க வேண்டும்? எவ்வளவு கொடுக்க வேண்டும்?**
வேதம் சொல்கிறது ஒருவன் தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன் (2 கொரி 9 : 7). 1 கொரி 16 : 2 ன் படி உங்களில் அவனவன் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்.கிறிஸ்தவர்களாகிய நாம் நம் உள்ளத்தில் ஏவப்படும்பொழுதெல்லாம் அது எவ்வளவா யிருந்தாலும் கொடுக்க வேண்டும். நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிருக்கவில்லை. ஆதலால் பழைய உடன்படிக்கை உபாத்தியாகும்.எல்லாவற்றைக்காட்டிலும் தேவனுக்கே முதலிடம் கொடுத்து வாழ பழகிக் கொள்ள வேண்டும்.தேவனிடத்தில் விசுவாசமாயிருந்து, வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்று இயேசு சொன்ன




வார்த்தைகளை நினைவிற்கொள்ள வேண்டும். சில ஜனங்கள் அதிகமாக சம்பாதிப்பதில்லை எனினும் உதாரத்துவமாய் கொடுக்கிற சிறிய தொகையாயினும் அதுவே முக்கியம். ஐசுவரியவான்கள் தங்கள் தயாளத்திலிருந்து எடுத்து கொடுக்கும்போது இருபது சதவீதத்திற்கும் அதிகமாகவே கொடுக்கலாம்.சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ்சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள் (அப்போ 11 : 29).

**தருமஞ்செய்தலோ காணிக்கையோ யாருக்கு கொடுக்கப்பட வேண்டும்?**
கொடுத்தல் என்பது சபைக்கூட்டத்தார் வழியாக தேவனுடைய சத்தியத்தின்படி சில நோக்கங்களுக்காக செய்யப்பட வேண்டும் 1 தீமோ 5 : 16 ன் படி ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் உதவிசெய்ய வேண்டும். திக்கற்ற பிள்ளைகளுக்கும் (யாக்கோபு 1 : 27) சபைக்கும் சுவிசேஷ பணிக்கும் உதவிசெய்ய வேண்டும்.மக்கெதோனியாவிலும் அகாயாவிலு முள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான் களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள் சகாயம் செய்ய விருப்பங்கொண்டிருக்கிறார்கள் (ரோமர் 15 : 25-26). யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ்சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள் (அப் 11 :27-29).

ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திர மில்லாமலும், அனுதின ஆகார மில்லாமலும் இருக்கும்போது, சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்கு கொடாவிட்டால் பிரயோஜனமென்ன (யாக் 2 :14-18). ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும் விசேஷமாக, விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம் (கலா 6 :9-10). குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக் கடவன் (எபே 4 : 28). அது போலவே சபைக் கூட்டத் தாரையும், சபை ஆராதனை யையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பும் நம்முடையது.பழைய ஏற்பாட்டிலே, இஸ்ரவேல் ஜனங்கள் தசமபாகமானது, ஆசாரிய ஊழியஞ்செய்யும் லேவி கோத்திரத்தாருக்கு உரியது. புதிய ஏற்பாட்டில் ஊழியங்களுக்கு உதவும்படி பரிசுத்தவான்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக...... நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா (1 கொரி 9 : 7-11). மேலும் திருவசனத்தில் உபதேசிக்கப் படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன் (கலா 6 : 6). போதகரோ, சுவிசேஷகரோ அல்லது மிஷனெரி பணி செய்வோரோ யாராயிருந்தாலும் வேலையாள் கூலிக்குப் பாத்திரவான்.தேவராஜ்ய பணி செய்வோருக்கு நன்மைசெய்ய வேண்டியது பரிசுத்தவான்கள் யாவருடைய கடமையாகும்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?

### தசமபாக கோல்

கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது லேவி 27 : 32. ஆடுகள் இரவில் தொழுவத்திற்குள் கூட்டங் கூட்டமாக அடைக்கப்படும்போது, மேய்ப்பன் அங்கே நின்று கொண்டு, சாயம் பூசப்பட்ட ஒரு தடியை கையில் பிடித்துக் கொண்டு, ஒவ்வொரு பத்தாவது ஆட்டிலும் பேனாவைக்கொண்டு மையிடுவது போல, அடையாளம் போடுவான்.இவ்வாறு தசமபாகத்திற்கென்று அடையாளம் போடப்பட்ட ஆடுகள் எண்ணிக்கை தவறாமல் இருக்கும்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

### சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகும்

ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலீபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலீபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்
-1கொரி 9 : 13-14.

ஊழியக்காரராகிய நாம் ஒருபோதும் கர்த்தருடைய காணிக்கை வீணாய், விரயமாய் போகாதபடிக்கு பிதாவாகிய தேவனை வேண்டிக் கொள்ளுங்கள். அவர் உங்களை அனுதினமும் போஷித்து வழிநடத்துவார். ஜனங்களை நல்வழிப்படுத்தி இரட்சிப்படைய செய்யவே தேவன் ஊழியக்காரர்களை தெரிந்துகொண்டார். ஆகவே லௌகீகசிந்தை, லாபத்திற்காக நாம் பிரியப்படக் கூடாது.



சுவிசேஷபணி செய்யும் ஒவ்வொருவரும் மனுஷனை அல்ல, மாறாக தேவனையே நோக்கிப் பார்க்கவேண்டும்.அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையினருக்கு தியாகத்தை நினைப்பூட்டுகிறார்.ஆசாரியர்கள் அவர்களுக்கு பலிகளின் பங்கை எடுத்துக்கொள்வது வழக்கம்.பலீபீடத்தண்டையில் காத்திருக்கும் அவர்களுக்கு பலிபீடத்தின் பலிகளினால் பிழைப்புண்டாகும். ஆகவே இன்றும் தேவனுடைய பரிசுத்தவான்கள் மத்தியிலே அது வழக்கமாயிற்று.

இயேசுகிறிஸ்துவால் அவருடைய ஊழியத்துக்கென்று அழைக்கப்பட்டு, தங்களுடைய வாழ்வை அவருக்கென்று அர்ப்பணித்து வாழ்ந்து சுவிசேஷ பணியை செய்யும் ஒவ்வொரு ஊழியக்காரரையும் ஆதரிக்கவேண்டியது நம் கடமை.அழைக்கப்பட்ட அழைப்பிலே தரித்து நின்று ஊழியஞ்செய்யும்படியாய், விசுவாசிகளாகிய நாம் உதாரத்துவமான நம்முடைய காணிக்கைகளாலும், தசமபாகத்தாலும் அவர்களைத் தாங்க வேண்டும்.ஆவிக்குரிய தேவராஜ்யபணியை தொடர்ந்து புதுபெலத்தோடு செய்ய தேவன்தாமே கிருபை செய்வாராக

CONTACT :-

The Editor,
Gospel Truth,
Church of God Publication
2 / 227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.VEDHA, CHURCH OF GOD, 2/227 KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316